**செய்தி வெளியீடு எண்.520** **நாள்.3.7.2008**

**நகராட்சி நிர்வாகத்துறைச் செயலாளரின் செய்திக் குறிப்பு**

திருப்பூர் நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டு 1.1.2008 முதல் செயல்பட்டு வருகிறது. அரசு ஏற்கனவே 17.11.2007 அன்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் திருப்பூர் மாநகராட்சியுடன், திருப்பூரைச் சுற்றியுள்ள 15 வேலாம்பாளையம், நல்லூர் ஆகிய நகராட்சிப் பகுதிகளும், செட்டிபாளையம், மண்ணரை, தொட்டிபாளையம், ஆண்டிபாளையம், வீரபாண்டி, முருகம்பாளையம், நெருப்பெரிச்சல், முத்தனம்பாளையம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளும் பின்னர் இணைக்கப்படும் என்று அறிவித்துள்ளது. இதற்கிடையில் திருப்பூர் மாநகராட்சியை விரிவுபடுத்தும் பணிகள் ஏதும் நடைபெறவில்லை என இன்றைய நாளேடு ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. திருப்பூர் மாநகராட்சியுடன் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை இணைப்பதற்கு முன்பாக விரிவுபடுத்தப்படவுள்ள மாநகராட்சிப் பகுதிக்கான வார்டுகள் அமைத்தல், மண்டலங்கள் பிரித்தல் போன்ற ஆயத்தப் பணிகளை மேற்கொள்வதற்காக, நகராட்சி நிர்வாகத் துறையின் கூடுதல் இயக்குநர், சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டு, அவர் இப்பணிகளை தற்போது மேற்கொண்டு வருகிறார். திருப்பூர் மாநகராட்சியை விரிவுபடுத்தும் பணி அடுத்த தேர்தலுக்குள் நிறைவடைந்தால் போதுமானது.

இப்பணிகள் முடிவடைந்த பின்னர் அடுத்த உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக, திருப்பூர் மாநகராட்சியின் எல்லைகள் ஏற்கனவே அரசால் அறிவித்தபடி விரிவுபடுத்தப்படும்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9.